# தமிழ்ப் பயிற்சித் தேர்வு - 2014

பத்தாம் வகுப்பு | தமிழ் முதல் தாள்
நேரம்: 2.30 மணி | மதிப்பெண் 100

குறிப்பு: 1. இவ்வினாத்தாள் ஐந்து பிரிவுகளைக் கொண்டது.
2. விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும் அமைதல் வேண்டும்.

## பிரிவு - I (மதிப்பெண்கள் : 20)

### பகுதி - 1

உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 6X1=6

1. சைவத் திருமுறைகள் மொத்தம்
   அ) பத்து ஆ) பதினொன்று இ) பன்னிரண்டு
2. சிருங்கி பேர நகரத் தலைவன்
   அ) இராமன் ஆ) குகன் இ) அனுமன்
3. பணை என்னும் சொல்லின் பொருள்
   அ) அரசு ஆ) ஆல் இ) மூங்கில்
4. தமிழில் உள்ள ஒலிகள்
   அ) 200 ஆ) 300 இ) 500
5. பகைவனிடமும் அன்பு காட்டு எனக் கூறிய நூல்
   அ) பகவத்கீதை ஆ) நன்னூல் இ) பைபிள்
6. பெரும்பாலான பணிகளுக்கு அடிப்படைத் தகுதி
   அ) பத்தாம் வகுப்பு ஆ) பன்னிரண்டாம் வகுப்பு இ) எட்டாம் வகுப்பு.

### பகுதி - 2

கோடிட்ட இடங்களை நிரப்புக. 6x1=6

7. இரட்டைக் காப்பியங்கள் என்பன சிலப்பதிகாரமும் ____________ ஆகும்.
8. போலிப் புலவர்களின் தலையை வெட்டுபவர் ____________
9. தார் வேந்தன் கோல் நோக்கி வாழும் ____________ போன்றிருந்தேனே.
10. பெரியார் சமூக ____________ எதிர்த்தவர், மூடக் கருத்துகளை ____________
11. படச்சுருள் ____________ என்னும் பொருளால் ஆனது.
12. நாள்தோறும் கல்வியில் ____________ உண்டாகிக் கொண்டிருக்கின்றன.

### பகுதி - 3

பொருத்துக. 4x1=4

13. பண்பு - கூறியது மறாஅமை
14. அன்பு - பேதையார் சொல் நோன்றல்
15. அறிவு - தன்கிளை செறாஅமை
16. செறிவு - பாடறிந்து ஒழுகல்

விடைக்கேற்ற வினா அமைக்க. 4x1=4

17. எல்லா மனிதர்களையும் ஒரே மாதிரியாக நடத்துவது சமத்துவமாகும்.
18. திரையரங்குகளில் திரைப்படம் காட்ட ஒளி ஒலிப் படக் கருவி பயன்படுகிறது.
19. இலக்கியங்கள் என்பவை மருந்தின் மேலிட்ட இனிப்பு போன்றவை.
20. வள்ளலார் அருளிய வழிகளைக் கடைப்பிடித்து ஒழுகினால் மனிதநேயம் மலரும்.

## பிரிவு - II (மதிப்பெண்கள் : 20)

### பகுதி - 1

கீழ்க்கண்ட வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க. 5x2=10

21. நன்றிக்கு வித்தாவது எது?
22. கையுறைப் பொருள்களாகக் குகன் கொண்டு சென்றவை எவை? யாருக்குக் கொண்டு சென்றான்?
23. வந்தவர் வாகீசர் என அறிந்ததும் அப்பூதியடிகள் என்ன செய்தார்?
24. சிவபெருமான் எத்தன்மையன்?
25. பண்பெனப்படுவது யாது?
26. நல்லார் தொடர்பை கைவிடுதல் - எத்தன்மைத்து?
27. ஆழ்வார்கள் பாடிய பாடல்களின் தொகுப்பின் பெயரென்ன?

### பகுதி - 2

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்து வினாக்குளுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க. 5X2=10

28. ஒரு மொழி நிலைப்பெற்று நிற்பதற்குரிய தகுதிபாடுகள் யாவை?
29. கொடுங்கடலால் கொள்ளப்பட்ட பகுதிகள் யாவை?
30. கல்விப் படங்களின் வாயிலாக நாம் அறிவன யாவை?
31. [illegible]

33. தற்போது வளர்ந்து வரும் இரண்டு தொழில் நுட்பத் துறைகள் யாவை?
34. மருந்தில்லா மருத்துவம் பற்றி திருவள்ளுவர் கூறுவது என்ன?

## பிரிவு - III (மதிப்பெண்கள் : 24)

### பகுதி - 1

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க. 3X4=12

35. தமிழ்மொழி வளர்ச்சியடைய பாரதிதாசன் கூறும் வழிவகைகள் யாவை?
36. விருத்தமாதவரை நோக்கி இராமன் கூறியவை யாவை?
37. தலைவனுக்குத் தோழி கூறும் செய்தியினை நற்றிணைப் பாடல் வழித் தொகுத்து எழுதுக.
38. சீறாப் புராணம் - குறிப்பு எழுதுக.
39. சாதனைப் பூக்கள் என்று எவற்றைச் சாலையார் சுட்டுகிறார்?

### பகுதி - 2

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க. 3X4=12

40. பெண்ணுரிமையை விளக்குக.
41. அம்பேத்கார் பெற்ற கல்வித் தகுதகள் யாவை?
42. பேச்சுக் கலையில் மொழியும் முறையும் எவ்வாறு அமைதல் வேண்டும்?
43. உழவுத் தொழில் குறித்து எழுதுக.
44. மனித நேயம் குறித்து காந்தியடிகள் கூறியது யாது?

## பிரிவு - IV (மதிப்பெண்கள் : 10)

45. கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்குளுக்கு விடையளிக்க. 5

"பாத்தனதாக் கொண்ட பிள்ளைப் பாண்டியன் வில்லி ஒட்டக்
கூத்தனிவர் கல்லாது கோட்டிகொளும் - சீத்தையரைக்
குட்டிச் செவியறுத்துக் கூட்டித் தலைகளெல்லாம்
வெட்டிக் களைபறிக்க மேலாய்த்தூர்"

வினாக்கள்:

1. இப்பாடல் இடம்பெற்ற நூல் எது?
2. இப்பாடலில் குறிப்பிடப் படும் புலர்களின் பெயர்களை எழுதுக.
3. செவியறுத்து - பிரித்து எழுதுக.
4. சீத்தையர் - பொருள் கூறுக.
5. இப்பாடலில் இடம்பெற்றுள் அடி எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக.

46. கீழ்க்காணும் உரைப் பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க. 5

சங்க காலத்தில் ஒரு முல்லைக் கொடியின் துயர் நீக்க, பாரிவள்ளல் தன் தேரையே ஈந்தார். பல நூற்றாண்டுகள் கழித்துப் பாரிவள்ளலைப் போல வள்ளலார், "வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்று பயிர் வாடத் தாம் வாடினார். வீடுதோறும் இரந்தும் பசியறாது அயர்ந்தவரையும், நீடிய பிணியால் வருந்துவோரையும், ஈடில் மணிகளாய், ஏழைகளாய் நெஞ்சு இளைத்தோரையும் கண்டு வருத்தத்தால் உயிர் இளைத்தார் வள்ளற்பெருமான். இவ்வருத்தம் நீங்கவே வடலூரில் சத்திய தரும சாலையை நிறுவி, சாதி, மத வேறுபாடின்றி பசித்தோர்க்கெல்லாம் உணவிட்டார். அங்கு, அவர் ஏற்றி வைத்த அடுப்பின் கனல், இன்றும் பலலோர் பசிப்பிணியைப் போக்கி வருகின்றது.

1. முல்லைக் கொடியின் துயர் நீக்க தேர் ஈந்தவர் யார்?
2. வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன் என்று கூறியவர் யார்?
3. சத்திய தரும சாலை எங்கு நிறுவப்பட்டது?
4. யார் யாரையெல்லாம் கண்டு உயிர் இளைத்தார் வள்ளற்பெருமான்?
5. இவ்வுரைப் பகுதிக்குப் பொருத்தமான தலைப்பு தருக.

## பிரிவு - V (மதிப்பெண்கள்: 26)

### பகுதி - 1

கீழ்க்காணும் வினாக்களுக்குப் பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க. 2X8=16

47. அ.கண்ணகிக்கும் பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனுக்கும் நடந்த சொற்போரினை உரையாடலாக அமைத்து எழுதுக.

(அல்லது)

ஆ. பொருள் செயல்வகை என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் வளமார்ந்த கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

48. அ. செம்மொழிக்குரிய எவையேனும் ஐந்து தகுதிபாடுகளை விளக்கி எழுதுக.

(அல்லது)

ஆ. கலை அறிவியல், சிறுதொழில் கல்வி குறித்து விவரிக்க.

49. செய்யுள் வடிவில் விடை தருக. 2+2+3+3=10

அ) இடிப்பாரை - எனத்தொடங்ககும் குறள்.
ஆ) வினை - என முடியும் குறள்
இ) துன்புளதெனின் - எனத்தொடங்கும் கம்பராமாயணப் பாடல்.
ஈ) மீன் நோக்கும் - எனத் தொடங்கும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் பாடல்.

பத்தாம் வகுப்பு | தமிழ் இரண்டாம் தாள் | தேர்வெண் | | | | | |

நேரம்: 2.30 மணி | மதிப்பெண்: 100

குறிப்பு: 1. இவ்வினாத்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.
2. விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும் அமைதல் வேண்டும்.

## பிரிவு - I (மதிப்பெண்கள் : 20)

### பகுதி - 1

உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 5x1=5

1. பொது மொழியைக் கண்டறிக.
அ) கோ ஆ) படம் பார்த்தான் இ) தாமரை
2. கீழ்வருவனவற்றுள் குறிப்பு வினையெச்சத் தொடரை எடுத்து எழுதுக.
அ) நல்ல பையன் ஆ) மெல்லப் பேசினான் இ) வந்த பையன்
3. கடலை - இச்சொல்லில் பயின்று வரும் குறுக்கம்
அ) ஐகாரக் குறுக்கம் ஆ) ஔகாரக் குறுக்கம் இ) மகரக் குறுக்கம்
4. மார்கழி, தை ஆகிய இரண்டும் ------------- காலத்திற்குரியன.
அ) முன்பனி ஆ) பின்பனி இ) இளவேனில்
5. உலகு ___ என்னும் சொல் வெண்பாவில் ஈற்றடியின் ஈற்றுச் சீராயின் அதன் வாய்பாடு
அ) நாள் ஆ) காசு இ) பிறப்பு.

### பகுதி - 2

கோடிட்ட இடங்களை நிறைவு செய்க. 5x1=5

6. ஒரு சொல் தனித்து நின்று பொருள் தருவது --------------------
7. நன்னூல் கிடைக்குமா எனக் கடைக்காரரிடம் கேட்பது ---------------- வினா.
8. மலரன்ன சேவடி இத்தொடரில் அமைந்துள்ள உவம உருபு ------------------
9. மணமுழா, நெல்லரிக்கிணை ஆகிய இரண்டும் -------------------- திணைக்குரிய பறைகள்.
10. ஆசிரியப்பாவின் வேறு பெயர் ----------------------- ஆகும்.

### பகுதி - 3

சுருக்கமாக விடையளிக்கவும். 10x1=10

11. வல்லினம் மிகா இடங்களுள் ஒன்றனைச் சான்று தந்து விளக்குக.
12. உருவகத்தை உவமையாக்குக: அடிமலர்
13. அறம் செய்ய வேண்டும் - கட்டளை வாக்கியமாக மாற்றுக.
14. ஒருமை, பன்மை பிழை நீக்கி எழுதுக. இப்போது அவர் கையில் கோப்புகள் இருந்தது.
15. கீழ்க்காணும் தொடரில் சந்திப் பிழையை நீக்கி எழுதுக. திரைபடம் மக்களை தன்பால் ஈர்த்து கட்டி போடவல்லது.
16. பிறமொழிச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக. நான் இந்த காலேஜின் ஓல்ட் ஸ்டூடண்ட்
17. இருவினை - இத்தொகைச் சொல்லை விரித்து எழுதுக.
18. அத்திப் பூத்தாற்போல - இவ்வுவமையை சொற்றொடரில் அமைத்து எழுதுக.
19. மரபுத் தொடருக்கேற்ற பொருளை எழுதுக.
இளங்கோவின் குடும்பத்தினர் வாழையடி வாழையாக வேளாண்மைத் தொழில் செய்து வருகின்றனர்.
20. நிறுத்தக் குறியிட்டு எழுதுக.
சட்டத்தை மதிப்போம் குற்றம் களைந்த வாழ்வை வாழ்வோம் சட்டம் நம்மைக் காக்கும்.

## பிரிவு - II (மதிப்பெண்கள் : 10)

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு விடையளி. 5x2=10

21. ஐகாரக் குறுக்கம் - எடுத்துக்காட்டுடன் விளக்குக.
22. முற்றெச்சம் என்றால் என்ன? சான்று தருக.
23. இனங்குறித்தல் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.
24. போற்றி - பகுபத உறுப்பிலக்கணம் தருக.
25. விடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?
26. செம்மை + மொழி - எவ்வாறு புணரும்.
27. வாகைத் திணை என்பது யாது?

## பிரிவு - III ( மதிப்பெண்கள்: 50)

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்க 2 X5 = 10

28. நேரிசை ஆசிரியப்பாவினை எடுத்துக்காட்டு தந்து விளக்குக.
29. தேவர் அனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான் - இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணியை விளக்குக. (அல்லது)
தற்குறிப்பேற்ற அணியை சான்றுடன் விளக்குக.
30. கீழ்க்காணும் குறட்பாவிற்கு அலகிட்டு வாய்பாடு தருக.
செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூறிய தில்.

### பகுதி - 2

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்கு ஒவ்வொன்றிற்கும் அரைபக்க அளவில் விடையளிக்க. 2x5=10

31. பரிதிமாற் கலைஞரின் தமிழ்த்தொண்டினை விளக்குக.
32. அன்றாட வாழ்வில் பயன்படும் சட்டங்களில் இரண்டினை விளக்குக.

அ) "டாடி, வர்ற சண்டே எனக்கு பர்த்டே. பட், நீங்க இன்னும் எனக்கு பர்த்டே டிரஸ் எடுக்கவில்லையே, வெய் டாடி? என்னோட பிரண்ட்ஸையெல்லாம் வீட்டுக்கு வரச்சொல்லிக் கால் பண்ணியிருக்கிறேன்"

"சண்டே வர்றதுக்கு இன்னும் ஸிக்ஸ் வீக்ஸ் இருக்குதே, டோண்ட் வொர்ரி. டுமாரோ ஈவினிங் ஷாப்பிங் போகலாம். இப்ப உனக்கு ஹாப்பி தானே"

ஆ) கீழுள்ள அரபு எண்களைத் தமிழெண்களாக மாற்றி எழுதுக. 75, 106, 832, 49

35. கீழ்க்காணும் ஆங்கில உரைப் பகுதியை தமிழாக்கம் செய்க. 3+2=5

அ) Food is essential for all living beings. without food man cannot live long. Every man has to eat a certain quantity of food, If he eats less than that quantity his health will bail and he will fail ill. So, everyman has to eat enough food to live.

ஆ) கீழ்க்காணும் ஆங்கிலப் பழமொழிகளில் எவையேனும் இரண்டனுக்கு இணையான தமிழ்ப் பழமொழிகளை எழுதுக.

1. Haste makes waste.
2. Money Makes many things.
3. Stive the rod while it is hot.
4. Self help is the best help.

36. கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்கு விடையளி. 5

அ) கீழே கொடுக்கப்பட்டுள்ள கதையை நிறைவு செய்து பொருத்தமான தலைப்புத் தருக.

வயதான தந்தைக்கு நான்கு மகான்கள் இருந்தார்கள். அவர்கள் எப்போதும் ஒற்றுமையின்றிச் சண்டையிட்டுக் கொண்டே இருந்தார்கள். அதனால் மனம் வருந்திய தந்தை அவர்களை எப்படியாவது திருத்த வேண்டும் என எண்ணினார். ஒருநாள்.......

(அல்லது)

ஆ) கீழ்க்காணும் தலைப்பில் எட்டு வரிகளுக்கு குறையாமல் கவிதை ஒன்று எழுதுக. மழை அல்லது நட்பு

பகுதி - 5

37. கீழ்க்காணும் பாடலைப் படித்து திரண்ட கருத்துடன் ஏற்புடைய நயங்கள் ஐந்தினை எழுதுக. 5

இளங்கதிர் கிழக்கில் இன்னும் எழவில்லை
இரவு போர்த்த இருள் நீங்கவில்லை
ஆயினும் கேள்வியால் அகலும் மடமைபோல்
நள்ளிரவு மெதுவாய் நகர்ந்து கொண்டிருந்தது
தொட்டி நீலத்தில் சுண்ணாம்பு கலந்த
கலப்பென இருள்தன் கட்டுக் குலைந்தது
புலந்திடப் போகும் பொழுது கட்டிலின்
மலர்ந்தன அந்த மங்கையின் விழிகள்

பாரதிதாசன்.

38. கொடுக்கப்பட்டுள்ள வங்கிக் கணக்கில் பணம் எடுக்கும் படிவத்தை நிரப்புக. 5

சேமிப்பு வங்கி கணக்கு எண் ____________ இந்த ஆணைப்படிவத்துள் கணக்குப் புத்தகம் இணைக்கப்பட வேண்டும்.

சேமிப்பு கணக்கு நாள்:

____________ வங்கி ____________ எனக்கு அல்லது இதனை கொணர்பவர்க்கு ரூபாய் ____________ வழங்குக.

ரூ.

கணக்கு வைத்திருப்பவர் கையொப்பம்

பகுதி - 7

39. சூழலைப் படித்து கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக. 3+2=5

அ) யாழினி பத்தாம் வகுப்பு மாணவி. அவள் மிகவும் கவலையுடன் அமர்ந்திருந்தாள். ஏனென்றால் பள்ளியில் நடக்கவிருந்த கட்டுரைப் போட்டியில் யாழினி தன் பெயரைக் கொடுக்கவில்லை. அழகான கையெழுத்தும் சிறந்த அறிவுடைய அவள் கலந்து கொள்ளவில்லை என்றதும் தோழிகள் அதற்கான காரணத்தை அவளிடம் கேட்டனர். அதற்கு யாழினி என் கட்டுரைக்குப் பரிசு கிடைக்கவில்லை என்றால் என்னால் தாங்கிக்கொள்ள முடியாது என்று பதில் கூறினாள்.

1. யாழினி எதனால் கவலையுடன் அமர்ந்திருந்தாள்?
2. யாழினியிடம் இருந்த திறமைகள் யாவை?
3. தோழிகளிடம் யாழினி கூறிய காரணம் என்ன?

ஆ) கீழ்க்காணும் சூழலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

விழிமாற்றுத் திறனாளர் ஒருவர் சாலையைக் கடப்பதற்காக நெடுநேரமாகக் காத்துக் கொண்டு இருக்கிறார். அந்த வழியாகப் பலரும் நடந்து செல்கின்றனர். ஆனால் அவருக்க உதவ ஒருவரும் முன்வரவில்லை.

1. இது போன்றதொரு சூழலில் நீ எவ்வாறு செயல்படுவாய்?
2. பிறருக்கு உதவுவதன் மூலம் வெளிப்படும் பண்பு யாது?

## பிரிவு - IV ( மதிப்பெண்கள்: 20)

பகுதி - 1

40. கீழ்காணும் வினாக்களுள் ஒன்றனுக்கு விடையளிக்க 1x10=10

அ) நம் குடியிருப்புப் பகுதியில் உள்ள பழுதுபட்ட சாலையைச் சீரமைக்க வேண்டி நகராட்சி ஆணையருக்குக் கடிதம் எழுதுக. (அல்லது) ஆ) நீ கண்டு களித்த இடம் குறித்து உன் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

பகுதி - 2

41. கீழுள்ள வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்குக் குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக. 1x10=10

அ) சுற்றுச் சூழல் - மாசுக் கட்டுப்பாடு - இயற்கையை அழித்தல் - காற்று மாசு - நச்சுப் புகை - நீர் மாசு - தொழிற்சாலையின் கழிவு - மாசடைந்த நீர் - ஒலி மாசு - ஒலி பெருக்கி இரைச்சல் - நரம்பு மண்டலம் பாதிப்பு - கட்டுப் படுத்தும் வழிகள்.

(அல்லது)

ஆ) பாரதியார் விடுதலைப் போராட்ட வீரர் - கவிஞர் - தமிழாசிரியர் - தேசியக்கவிஞர் - முன்னறி புலவர் - சமுதாயத்